THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

NOVEMBER, 1953.

CONNEMARA PUBLIC LIBRARY
19 JAN 1956
MADRAS

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

நவம்பர், 1953.

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர்:— A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை.

உதவி பத்திராதிபர்:—C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.

மானேஜர்:—கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211 தெற்கு மாரட் வீதி, மதுரை.

பத்திரிகைக் கமிற்றி:—

கனம் பிரடரிக் ஜேக்கப், மதுரை.
„ தேவப்பிரகாசம் ஐயர், திண்டுக்கல்.
„ தவமணி ஐயர், மண்டபம் கேம்பு.
„ ஜாஷ்வா, அத்தியட்சாதீன பொக்கிஷதார்.
„ A. சாமுவேல் ஐயர், பசுமலை. (தலைவர்.)

முக்கிய பொருளடக்கம்.

1. அத்தியட்சரின் கடிதம்.
2. திருச்சபைச் செய்திகள்.
3. பிரசங்கக் குறிப்புகள்.
4. சிறுவர் பாகம்.
5. இரட்சண்ய யாத்திரீக விளக்கம்.
6. கி. மு. சங்கப் பொருட்கள்.
7. "இயேசுவின் ஜெபப் பள்ளி."
8. விளம்பரம் (பரிசு வியாசம்).

தென் இந்திய சபையைச் சேர்ந்த
மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்

சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XV   பசுமலை, நவம்பர் 1953   இலக்கம் 1

வருடசந்தா: 1 ரூ. 8 அணா. தபாற்கூலி உட்பட.

தல்லாக்குளம்,
மதுரை,
அக். 29, 1953.

அத்தியட்சரின் கடிதம்

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே :—

நானும் அம்மாளும் மதுரைக்கு வந்து உங்களெல்லாரோடும் சேர்ந்து திருச்சபை ஊழியத்தில் பங்கு பெறுவதைப்பற்றி எங்களுக்கு மிகுந்த சந்தோஷம். கடவுள் நமக்களித்த ஏராளமான மழைக்காக நானும் நீங்களும் அதிக நன்றி பாராட்டுகிறோம். ஆகஸ்டு மாதம் எழுதிய கடிதத்தில் கடந்த ஆறு வருடங்களாகத் தொடர்ச்சியாய் நமக்கு நேரிட்ட பஞ்சக் கொடுமையின் அர்த்தத்தை விளக்க பரி. பேதுரு அப்போஸ்தலன் கூறிய வசனங்களை நினைப்பூட்டினேன். (1 பேதுரு 1 : 6-7) இந்த நெடுநாள் சோதனையின் மூலம் கடவுள் நமக்குப் போதிக்க விரும்புவதைக் கற்றுக்கொள்ளும்படி உங்களைக் கேட்டிருந்தேன். இப்போது நமக்கு மழையைத் தந்திருக்கிறார். கூடிய சீக்கிரம் சுபிட்சத்தை எதிர்பார்க்கலாம். முழு இருதயத்தோடு துதிசெலுத்தி, நமது நன்றியை நம் வாழ்க்கையின் மூலம பிரதிபலிக்கச் செய்வதே நாம செய்யும் முதல் கைங்கிரியமாகும்.

கடவுள் பெரியதோர் ஈவை நமக்குக் கொடுக்கும்போது அவர் செய்ததை விளங்கிக்கொள்ளும் பெரியதோர் பொறுப்பையும் நம் மேல் வைக்கிறார். 5000 கலிலேயர் அற்புதமாய் பசியாற்றப்பட்ட போது, அவர்கள் விளங்கிக்கொள்ளவில்லை. அவர் கொடுத்த ஆகாரம் உண்மையானதும் அழிந்துபோகாததுமான ஆகாரத்தின் அறிகுறியே. ஆக அவர்கள் வயிறு நிறைந்ததேயல்லாமல் அவர்கள் இரட்சிப்பை அடையவில்லை. வயிற்றிற்குரிய ஆகாரம் அவர்களைக் கிறிஸ்துவில் கிடைக்கும் நித்திய ஜீவனுக்குரிய உண்மையான ஆகாரத்திற்கு வழிநடத்தியிருக்கவேண்டும்.

கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் மழை இவ்வருடத்திற்கே. மறுபடியும் அடுத்த வருடம் நமக்கு மழை தேவை. ஆனால் நித்திய ஜீவனுக்காகச் சுரக்கும் ஜீவ தண்ணீர் உண்டு. மழையைக் கொடுத்த கடவுள் நாம் வேண்டிக்கொண்டால் அந்த ஜீவ தண்ணீரையும் கொடுப்பார். ஆகஸ்டுமாதக் குருமார் கூட்டத்தில் கோயம்புத்தூர் அத்தியட்சர் அங்கு நடக்கும் பரிசுத்தாவியின் கிரியைகளைப்பற்றிக் கூறினார். இதன் பலனாக அந்த ஜீவ தண்ணீருக்காக ஊக்கமாய் ஜெபிக்க வேண்டுமென்று உணர்ந்தோம். அந்தநாள் முதல் அனுதினமும் "அன்புள்ள கர்த்தாவே, உமது அருள்மாரி என் மேலும் என் சபையின் மேலும், உலகத்தின் மேலும் பெய்யச் செய்தருளும், ஆமென்" என்று ஜெபித்துவருகிறோம். 1953—54ல் நமது சபை உயிர்ப்பிக்கப்படும்படி பரிசுத்தாவிக்காக விசேஷ ஜெபம் செய்ய வேண்டுமென்றும், 1954—55ல் விசேஷ எழுப்புதல் கூட்டங்கள் நடக்கவேண்டுமென்றும், 1955—56ல் புறமதஸ்தருக்குள் விசேஷ சாட்சிபகர வேண்டுமென்றும் அக்டோபர்மீ நிர்வாகக் கமிற்றிமார் தீர்மானம் செய்தனர். ஆக இவ்வருடம் நாம் முக்கியமாய் அனுஷ்டிக்கும்படி ஏவப்படுவது ஜெபமே. வீடுகள், கிராமங்கள் தோறும் நடக்கும் கூட்டங்களிலும், தனி, பொது, ஆலய, தியானங்களிலும் நமது சபையை உயிர்ப்பித்துப் புதுப்பிக்கவேண்டுமென்று நாமனைவரும் ஏகோபித்து ஜெபிப்போமாக.

ஆனால் எப்படி ஜெபிப்பதென்று நமக்குத் தெரியுமா? "இது புத்தியீனமான கேள்வி. சிறு பிள்ளைக்குக்கூட ஜெபிக்கத் தெரியும்" என்று யாராவதொருவர் சொல்லலாம். அது உண்மை. ஆனாலும் ஜெபம் என்பது ஒரு மனிதன், மனுஷி செய்யக்கூடிய உன்னதமான, கஷ்டமான ஒரு காரியம். அக்கரையாய் ஜெபிக்கத் தலைப்படும்பொழுது வெகு சீக்கிரம் அது கஷ்டமானதெனப் புலப்படும். ஜெபிக்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும் இவ்வுலகத்தை நீத்து நமதாண்டவரை முகமுகமாய்த் தரிசிக்குமட்டும் ஜெபிக்கக் கற்றுக்கொண்டேயிருக்கவேண்டும். இதற்கனுகூலமாக இப்பத்திரிகையில் தொடர்ச்சியாய் ஜெபத்தைப்பற்றிய சில பாடங்களை வெளியிட ஒழுங்கு செய்திருக்கிறேன். இது ஜெபப்பள்ளியின் படிப்பாளியும் பரிசுத்தவானுமான ஆந்திரேயா மறே என்பவர் தொகுத்த "இயேசுவின் ஜெபப்பள்ளி" என்ற புஸ்தகத்தின் மொழிபெயர்ப்பு. 31 பாடங்களுள்ளன. ஒவ்வொன்றிலும் நமதருள் நாதர் ஜெபத்தைப்பற்றிப் போதித்தவை ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. சபைகளிலுள்ள ஜெபக்கூட்டத்தாரின் உபயோகத்திற்காகப் பிரத்தியேகமான பிரதிகள் பிரசுரமாகும். இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் ஜெபப்பள்ளியில் சேர்ந்து அவர் என்ன போதிக்கிறாரோ அதைக் கற்றுக்கொள்ளவேண்டும்.

கடவுளின் ராஜாக்களும் ஆசாரியருமாகக் கிறிஸ்து நம்மை ஆக்கியிருக்கிறார். மாபெரும் இச்சிலாக்கியங்களை ஜெபத்தில் உபயோகப்படுத்துவோமாக. ஜெபத்தின்மூலமாய் நாம் கடவுளோடு ஒத்துழைப்பவர்களாயும், அதன்மூலமாய் அவருடைய ஏராளமான ஆசீர்வாதங்களை இவ்வுலகத்திற்குக் கொண்டுவருபவர்களாயுமிருக்க வேண்டுமென்பதே கடவுளின் திருச்சித்தம். "நீங்கள் என் நாமத்தினால் எதைக் கேட்பீர்களோ அதைத் தருவேன்" என்பது அவர் அருள் வாக்கு. அவை வெறுமையான வார்த்தைகளில்லை. ஆனால் அதின் உண்மையை அறிய நாம் ஜெபிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். இதர காரியங்களில் பிரயாசம் எடுக்கிறது எவ்வளவு உண்மையோ அதே போல் ஜெபத்திலும் நாம் கற்றுக்கொள்ளுதல், போராட்டம், பழக்கம், நமது சகல நல்ல சக்திகளையும் ஒர்மைப்படுத்துதல் முதலியவற்றின் மூலம் கடவுள் நமக்களிக்கும் ஈவுகளைப் பெற முடியும். "நமது அறியாமையை உணரும்போதும், நமது தகுதியின்மையை அறியும்போதும, நம்பிக்கைக்கும் சந்தேகத்திற்கும் ஊடே உழன்று தவிக்கும்போதும் மட்டுமே தெய்வீகக்கலையாகிய வல்லமை மிக்க ஜெபம் கற்கப்படுகிறது".

வருகிற மாதங்களுக்குரிய ஒழுங்கை அடுத்தமாதம் எழுதுகிறேன். ஜெபிக்கும்படி கடவுள் நம்மை அழைக்கிறார். புதிதாய் திடசித்தத்தோடு ஜெபிக்கக் கற்றுக்கொள்வோமாக.

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,
லெஸ்லி நியூபிகின்,
அத்தியட்சர்.

அத்தியட்சரின் அலுவல்கள்

நவம்பர் 4—11 குண்டூர். பாரத்சேவ சமாஜக்கூட்டம்.
14—18 ராஜபாளையம், சிரிவிலிபுத்தூர், சிவகாசி திடப்படுத்தல்.
22 தல்லாக்குளம் திடப்படுத்தல்.
29 வடக்குவாசல், பசுமலை, திடப்படுத்தல்.
„ 30-டிச. 1 கீழாஞ்சுனை, ஆலயப்பிரதிஷ்டை, திடப்படுத்தல்.
டிசம்பர் 5—7 பனையடிப்பட்டி சாத்தூர்—திடப்படுத்தல்.
12—14 போடிநாயக்கனூர்—திடப்படுத்தல்.

திருச்சபைச் செய்திகள்

1. பாப்புவா மிஷன்.

பாப்புவாவில் நமது மிஷனரிமார் செய்து வரும் ஊழியம் மகத்தானது—கஷ்டமானது. அவர்களை நமது அன்றாடக ஜெபத்தில் நினைப்போமாக. இந்த ஊழியத்தின் தாபரிப்புக்காக உங்களால் இயன்ற பொருளுதவி செய்யக் கேட்கிறேன். கடந்த ஆண்டில் நமது அத்தியட்சாதீனம் சுமார் ரூ. 500/- கொடுத்தது. இந்த ஊழியத்தை நாம் தொடர்ந்து செய்ய உங்களுடைய உதவி தேவை.

பாப்புவா மிஷன் பொக்கிஷதார் மிஸிஸ் மால்றஸ் ஸ்மித்துக்கு றெவ. சத்தியா ஜோசப் எழுதிய கடிதத்தின் சில பாகங்களை பிரசுரிக்க அத்தியட்சர் அவர்கள் அனுப்பியிருக்கின்றனர். பாப்புவா மிஷனின் ஆதரவுக்காக கூற்றியிலுள்ள ஹைஸ்கூல் அச்சகம் கிறிஸ்மஸ் கார்டுகள் அச்சிட்டு சாதாரண கார்டுகளை கவர்களோடு ஓரணாவுக்கும், நல்ல கார்டுகளை இரண்டணாவுக்கும் விற்பனை செய்கின்றது. நமது பாஸ்ற்றறேற்றை சேர்ந்த அங்கங்களும மற்றவர்களும் தங்கள் பாஸ்ற்றர்கள் அல்லது சேகரத்து போதகன்மார்கள் மூலம் இக்கார்டுகளை தருவிப்பது நலம். கடிதத்தின் சில பாகங்களாவன :

" நாங்கள் கவோனியிலுள்ள 72 வாலிபர்களை வாலிபர் ஐக்கியத்தில் சேர்க்கும்படி ஆயத்தப்படுத்தி வருகின்றதை நீங்கள் அறிந்து சந்தோஷமடையலாம். அவர்கள், தாங்கள் கடவுளை உண்மையாக பின்பற்றுவோம் என்றும், அவரது வெளிச்சத்தை இம்மட்டும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படாத உள்நாட்டில் பிரசித்தப்படுத்துவோம் என்றும் பிரதிக்கினை பண்ணுவர். அவர்கள் இப்பிரதிக்கினையை ஏற்றுக்கொள்ளும் நாளில் நான் சில வருடங்களுக்கு முன் தென்னிந்தியா கடப்பை டிஸ்றிக்டில் ஊழியம் செய்யும்போது பின்பற்றின முறைமையை கொண்டுநடத்த எண்ணியிருக்கிறேன். இதற்கு முன்னதாகவே எங்கள் இல்லத்தின் முன் முற்றத்தில் ஓர் பெரிய சிலுவை அடையாளம் வெட்டப்பட்டு வெண்மையாக்கப்படும். முதல் ஆராதனை முடியவும் நான் என் தீவெட்டியை முதலில் கொழுத்துவேன். பின்னர் வாலிபர்கள் தங்களது தீவெட்டிகளை எனது தீவெட்டியிலிருந்து பற்றவைத்து பாடல்களுடன் அச்சிலுவையை சுற்றி வந்து அதனுள் அமருவார்கள். சிலுவை உயிரடைந்தாற் போல தோன்றும். நான் சிலுவையின் அடியில் ஓர் சிறு மேடையில் நின்று ஆராதனையை தொடர்வேன். அவ்வேளையில் அவ்வாலிபர் தங்கள் ஜீவியத்தை கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவுக்கு தத்தம் செய்து, வாலிபர் ஐக்கியத்தின் பிரதிக்கினைகளை மாறி மாறி சொல்லுவார்கள். இது எங்களுக்கு ஓர் மகத்தான நாளாகும். வருங்காலங்களில் பக்கத்து கிராமங்களிலுள்ள அநேக

வாலிபர் இந்த ஐக்கியத்திற்குள் வருவார்கள் என்று எண்ணுகிறோம்."

"ஆறுவது ஜான் உல்லியம்ஸ்" என்ற கப்பல் முதல் முதலாவதாக கவோனிக்கு வருவதால் இந்த டிஸ்றிக்ட் முழுவதும் மிகவும் பரபரப்புண்டாயிருக்கிறது. கடந்த மாதம், பாறைகளினூடேயுள்ள ஒடுங்கிய பாதையை காணக்கூடாததால் அக்கப்பல் இங்கு வர முடியவில்லை. ஆனால் இப்பொழுது கப்பல் தலைவன் இங்கு வரும்படி முயற்சிப்பார்."

2. Y.M.C.A., Y.W.C.A. ஜெபவாரம் நவம்பர் 8—14.

இந்த வாரத்தில் மேற் சொல்லிய ஸ்தாபனங்களை நம் ஜெபங்களில் நினைப்போம். அவைகள் செய்து வரும் முன்னேற்ற வேலைகளுக்காக ஸ்தோத்திரம் செலுத்துவோம். கடவுள் அவைகளை இன்னும் அவருடைய நாம மகிமைக்காக உபயோகப்படுத்தவேண்டுவோம். கீழ்கண்ட வேத பாகங்கள் தியானத்திற்காகக் குறிக்கப்பட்டவை.

ஞாயிறு	8உ	நானே மேசியாவாகிய கிறிஸ்து	யோவான்	4 : 25—26.
திங்கள்	9உ	நானே ஜீவ அப்பம்	,,	6 : 35—51
செவ்வாய்	10உ	நானே உலகத்திற்கு வெளிச்சம்	,,	8 : 12
புதன்	11உ	நானே நல்ல மேய்ப்பன்	,,	10 : 11—15.
வியாழன்	12 உ	நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்	,,	11 : 25—26.
வெள்ளி	13 உ	நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்	,,	14 : 5—9
சனி	14 உ	நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்.	,,	15 : 1—4

3. கோடைக்கானல் சபையின் நூறு வருட சரித்திரம்.

இந்நூற்றுண்டைச் சபையானது கடந்த ஏப்ரல் மீ நடத்தியது. இதைப்பற்றிய விவரமறிய விரும்புகிறவர்கள் கனம் உவில்லியம்ஸ் ஐயர், கொடைக்கானல், அல்லது கனம் காபிரியேல் துரைராஜ் ஐயர், வடக்கு வாசல், மதுரை, என்ற விலாசத்திற்கெழுதினால் இவ்விவரங்களடங்கிய ஓர் புஸ்தகத்தை இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளலாம்.

4. அத்தியட்சாதீனப் புஸ்தக டிப்போ.

சில மாதங்களுக்கு முன் சபைகளும் குருமாரும் சாதாரண கிறிஸ்தவ நூல்களை மலிவாக வாங்கி உபயோகிப்பதற்கு அநுகூலமான சில ஒழுங்குகள் செய்யப்பட்டதை நம் நேயர்கள் யாவரும் வாசித்திருப்பார்களென்று நம்புகிறோம். வழக்கம்போல் இந்த வருஷமும் நவம்பர் மாதம் 15 உக்குள் நமது அத்தியக்ஷாதீனத்தைச் சேர்ந்த எல்லா குருமாரும் மதுரை ராம்நாட் டயோசிஸன் டிப்போ அனுப்பியிருக்கும் ஆர்டர்பாரத்தில் தங்களுக்கு வேண்டிய கிறிஸ்தவ நூல்களையும பத்திரிக்கைகளையும் பூர்த்திசெய்து ஷை டயோசிசன் டிப்போ மானேஜர் அவர்கள் விலாசத்திற்கு அனுப்பிவிடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஷை ஆர்டர் பாரத்தை காலாகாலத்தில் பூர்த்திசெய்து கடந்த வருஷத்தில் அனுப்பாத குறையினால் நமது கிராம ஊழியர் பஞ்சாங்கம் (Village Workers Almanac) வேண்டிய அளவு அச்சடிக்கக் கூடாமற் போயிற்று. ஆகவே பிந்தி கேட்டவர்களுக்கு பஞ்சாங்கம் கிடைக்க மார்க்கமில்லாமற் போய்விட்டது. ஆகையினால் இந்த வருஷத்தில் எல்லா குருமாரும் தங்கள் தங்கள் பாஸ்ற்றரேற்றுக்கு வேண்டிய எண்ணத்தை ஆர்டர் பாரத்தில் பூர்த்தியாய் எழுதக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குருமாருக்கு கொடுக்கவேண்டிய ஆர்டர் பாரங்கள் அந்தந்த சேகரதது லோக்கல் கவுன்சில் சேர்மென் அவர்களுக்கு மொத்தமாக எற்கனவே டயோசிசன் டிப்போவிலிருந்து அனுப்பப்பட்டிருக்கின்றன. ஷை பாரத்தை சேர்மென் அவர்களிடமிருந்து கேட்டுப் பெற்றுக்கொண்டு உடனே பூர்த்திசெய்து அனுப்பினால் தாமதமில்லாமல் 1954-ம் வருஷ பத்திரிகைகளும் நூல்களும் உடனுக்குடன் கிடைக்க ஏற்பாடு செய்ய அனுகூலமாயிருக்கும்.

இது தவிர ஷை ஆர்டர் பாரத்தில் ஆங்கில பத்திரிகைகளான "The Guardian," "The N.C.C. Review" என்ற இந்த இரண்டு பத்திரிகைகளையும் சேர்த்து அச்சடிக்க தவறிவிட்டது. இந்த இரண்டு பத்திரிகைகளும் குருமாருக்கு பாதி விலைக்கு கொடுப்பதாக தீர்மானித்திருக்கிறது. ஷை பத்திரிகைகள் வேண்டிய குருமார் அந்த ஆர்டர் பாரத்திலேயே சேர்த்து எழுதி அனுப்ப கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அப்பா ஸ்ரீநிவாஸன்,

டயோசிசன் டிப்போ மானேஜர்.

5. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை வேதாகம சங்கம். (டிசம்பர் 6 ம் தேதி 1953)

கிறிஸ்து ஜனனம் இருந்திராமல் போனால்.........

"கிறிஸ்து ஜனனம் நடை பெறவில்லை என்று நினைத்துக்கொள்வோம்" என்று 30 ஆண்டுகட்கு முன் ஒரு கவிஞர் மனப்பான்மையாகச் சொன்னதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நாமோ அப்படி எண்ண வெண்ணோம். அப்படியிருந்திருந்தால் உலகமானது மிகவும் எளிமையாகவும் பாழாகவும் இருக்கும், கிறிஸ்து ஜனனம் இருந்திராவிட்டால் அல்லது இரட்சகர் பிறவாதிருந்தால் அவரைப் பின்பற்றும்படி நம்மை அழைக்க ஒரு போதகர் இருந்திருக்கமாட்டார். மேலும் அருமையான மலைப்பிரசங்கம் நமக்கு அருளப்படும்படியாக ஒரு தெய்வீக ஆசிரியர் இருந்திரார். இருளால் அழிக்க முடியாத மகிமையான உயிர்த்தெழுதலின் காலையின் ஜெய கெம்பீரம் இருந்திருக்க முடியாது.

கிறிஸ்து ஜனனம வாஸ்தவமாயிருப்பதனாலும் இரட்சகர் மெய்யாகவே வந்ததினாலும், வேதாகமங்களின் சாட்சிகளால் அவரை நாம் அறிவதாலும் நாம் அந்த சந்தோஷமான நம்பிக்கையில் ஜீவிக்கிறோம். அவரைக்குறித்து நம்முடைய பெற்றோராலும் சிநேகிதர்களாலும் கேள்விப்பட்டிருக்கிறோம். அவரை திருச்சபையின் சாட்சியாலும் அறிவோம். மற்றவர்களுடைய சாட்சிகளும் சபையின் சாட்சியை தவிர்த்து அவருடைய வருகையை எதிர்பார்த்து வந்த தீர்க்கதரிசிகளின் நற்செய்தியையும், அவர் பூமியிலிருந்தபோது அவரை பார்த்த அப்போஸ்தலர்களுடைய சாட்சிகளையும் வரைந்துள்ள பண்டைகாலத்து பழைய வேதாகமம் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவ்வப்போஸ்தலர்கள் அவரைக் கண்டும் கேட்டும் அவர் உயிர்த்தெழுந்தபோது அவரோடு நடமாடியும் சம்பாஷித்தும் வந்தார்கள். இந்நாள் வரை அந்த தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் கொடுத்த சாட்சிகளினால் தேவ ஆவியானவர் நமமுடைய இருதயங்களில் தம்முடைய ஜீவ வசனமாக எழுதியிருப்பதால் அவைகள் உண்மையானவை யென்று நாம் நிச்சயமாகவே அறிவோம்.

புதிப்பிக்கப்பட்ட நற்செய்திகளடங்கும் சாட்சிகளுள்ள வேதாகமங்களின் பக்கங்களை பரிசோதித்து அவைகளை பொக்கிஷங்களாக திருச்சபையானது பல நூற்றாண்டுகளாய் காப்பாற்றி வருகிறது.

150 வருடங்களாய் (1804-ம் வருடம் முதல்) வேதாகம சங்கங்களின் முயற்சியால் இந்த புத்தகம் ஆயிரம் பாஷைகளில் திருப்பப்பெற்று உலகமெங்கும் உபயோகிக்குமாறு பிரதிகள் அச்சிடப்பட்டிருக்கின்றன. இந்நாளில் எல்லாவித கிறிஸ்தவ வகுப்புகள் தங்களுடைய பாஷைகள் தங்களுடைய உபயோகத்திற்காகவும் தங்

கள் ஆலயங்களின் உபயோகத்திற்காகவும் வேதாகம புத்தகத்தை எளிதில் வாங்கலாம் என்று எதிர்பார்த்து, கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவர்கள் நம்பிக்கை கெடாமல் எளிதில் இப்புத்தகங்கள் அவர்களுக்கு கிடைக்க ஏதுவாயிருக்கிறது.

இன்று நாம் சுவிசேஷத்திற்காகவும் அதன் சத்தியத்திற்கு நிச்சயமான சாட்சிபகரும் வேதாகமங்களுக்காகவும் இந்த வேதாகமங்கள் நம்முடைய கைகளில் போடப்படும்படியாய் சிறமையெடுத்து உழைக்கும் வேதாகம சங்கங்களுக்காகவும் நாம் கர்த்தரை ஸ்தோத்திரிப்போமாக.

திரளான நம்முடைய உடன் தேசத்தாருக்கு இன்னும் வரவில்லை. தற்காலத்திலே கூட இந்த இரட்சகர் பிறப்பின் சந்தோஷ செய்தி அவர்களை அடையவில்லை. கலங்குகிற இந்த உலகத்தில் அவர்கள் ஜீவித்து, தேவன் மனிதனுனர் என்ற சத்தியத்தையும், குஷ்டரோகிகளை அவர் கரங்கள் தொட்டனவென்றும் அவருடைய சீஷர்கள் அன்பின் ஊழியம் செய்ததை அறியாதவர்களாயும் மேலும் அவர் சிலுவையில் தொங்கும்போது சத்திராதிகளுக்காக ஜெபித்த தெய்வீக அன்பை அறியாதவர்களாயும், மரணத்தின்மேல் வெற்றிக் கொண்டு எல்லா மனிதருக்காகவும் ஜீவ வாசல்களை திறந்த அன்பையும் அறியாதவர்களாய் இருக்கிறார்கள்.

ஒரு வருடத்தில் நம் நாடுகளில் 10 லட்சம் வேதாகமப் பிரதிகள் விற்கப்படுகின்றன. ஆனால் குடிமதிப்பின் தொகையோ நாலாயிரத்து ஐநூறு லட்சம். சுவிசேஷப்பிரதி ஒன்றை ஒவ்வொரு படிப்பாளியின் குடும்பத்திற்கும் கொடுக்குமாறு 10 லட்சமல்ல நூற்று எண்பது லட்சப் பிரதிகள் தேவை. இந்த பொறுப்பு நம்முடையது.

இதுவரை நடந்துள்ள ஊழியத்திற்காக நாம் கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறோம். நாம் ஜுபிலி வருடமாகிய 1954ம் வருடத்தை ஒரு மகிழ்ச்சிக்குறிய சந்தோஷமான ஆண்டாகும்படி உழைப்போமாக. நாம் இன்னும் உழைக்கும்போது நம்முடைய வேதாகம சங்கத்தின் வேலையைக் கர்த்தரண்டை ஒப்படைத்து ஒவ்வொரு கிறிஸ்தவ, புருஷன், ஸ்திரி, பிள்ளை பிரதிஷ்டை பண்ணப்பட்டு அதனால் வேதாகமங்கள் இந்நாடுகளில் ஒவ்வொரு வீட்டையும் அடையும்படி நாம் இடைவிடாமலும் ஊக்கமாயும் நம்முடைய விண்ணப்பங்களை தேவனது இருபாதத்தின் முன் சமர்ப்பிப்போமாக. இவ்வாறு நாம் பிரயத்தனப்படுவதால் ஒருவருக்கும் கிறிஸ்து ஜனனம் இல்லாமல் போகாதிருக்கும் நாள் சீக்கிரமாய் வரும்படியாய் ஆசிப்போமாக.

தலைவர்
பிஷப் C. K. ஜேக்கப்

பொது காரியதரிசி
P. மகந்தி

6. பாஸ்டரேட்டுகளில் கடன். இதை நிவிர்த்திப்பதற்காக நமது அத்தியட்சாதீனம் பல வழிவகைகளைக் கையாண்டு வருகின்றன. இம்முயற்சியில் பலருக்கு உபயோகப்படுமென நம்பி கீழ்கண்ட சில ஆலோசனைகளைக் குறிப்பிடுகிறோம். இது திண்டுக்கல் கிழக்குப் பாஸ்டரேட்டில் கையாளப்படுகிறது :—

அத்தியக்ஷாதீனக் கவுன்சில் தீர்மானப்படி இவ்வருஷம் (1953) ஆயத்த வருஷம்; அடுத்த வருஷம் (1954) உயிர்மீட்சி வருஷம்: மறு வருஷம் (1955) சாட்சியிடும் வருஷம். இதற்கேற்ப நம் சபைகளில் ஜெபச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வருஷத்தில் நம்மை ஆயத்தப்படுத்தி கர்த்தருடைய கரம் நம்மைத் தொடவும் நாம் திரும்பவும் உயிர்ப்பிக்கப்படவும் பிரயாசையெடுப்போமாக.

இதில் நீங்கள் எவ்விதம் உதவி செய்யக்கூடும்? அடியிற் குறிப்பிட்டிருக்கும் சில குறிப்புகளை வாசித்து அவற்றை நிறைவேற்றுவதன் மூலம் உதவி செய்வீர்களா?

1. உங்கள் சபையின் ஜெபச் சங்கத்தில் சேர்ந்து தினமும் அருள் மாரிக்காக ஜெபிக்கலாம்.
2. அன்றாட வேதவாசிப்பு சங்கத்தில் சேர்ந்து தியானம் செய்யலாம்.
3. உங்கள் சபையின் காரியங்களில் முன்னின்று ஒத்தாசை செய்யலாம்.
4. உங்கள் சபையில் ஆலயத்துக்கு வராதவர்களைச் சந்தித்து வரும்படி செய்யலாம்.
5. உங்கள் மாதச் சந்தாவை சற்று அதிகப்படுத்தலாம்.
6. உங்கள் சந்தா பாக்கி 30—9—53 முடிய ரூ............இதைச் செலுத்தலாம்.
7. உங்கள் அறுப்பின் பண்டிகைப் பாக்கி ரூ............இதைச் செலுத்தலாம்.
8. உங்கள் காணிக்கைக் கலயம் இன்னும் கொடுக்கப்படவில்லை. அதைக் கொடுக்கலாம்.
9. உங்கள் சபையில் உங்கள் பிரயாசத்தின் மூலமாய் அடுத்த அறுப்பின் பண்டிகை சிறப்பாகவும் வெற்றியாகவும் நடக்க ஒத்துழைக்கலாம்.
10. இன்னும் பல காரியங்களில் உங்கள் உதவியும் ஒத்துழைப்பும் தேவை.

பிரசங்கக் குறிப்புகள்

1 'உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக' யோ. 14:1.

இயேசு கிறிஸ்து தம் சீஷருக்குக் கூறிய இந்த வார்த்தைகள் அவை கூறப்பட்ட சமயத்தில் மிகவும் பொருத்தமானால், கர்த்தருடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் இவை பொருந்தாத காலத்தைக் காண்பது அரிது. சீஷர்கள் அந்நேரத்தில் கலங்காதிருக்கக் கட்டளை பெற்றார்களானால், கலங்கவேண்டிய காலம் எது? சீஷருக்குக் கூறிய வார்த்தைகளை ஆண்டவர் இன்று நமக்கும் கூறுகிறார். 'உன் இருதயம் கலங்காதிருப்பதாக.' என் இருதயம் கலங்காதிருப்பது எப்படி? நான் இருக்கும் இத்தகைய துன்ப நேரத்தில் என் இருதயம் கலங்கவேண்டாமென்றால், இருதயம் கலங்கவேண்டிய காலம் வேறு எது? நம் மனத்திலே இத்தகைய கேள்விகள் எழுகின்றன.

இந்நாளிலே நம் எல்லோருடைய இருதயமும் கலங்காவிடினும் இருதயம கலங்கும் காலம் வந்ததுண்டு, அல்லது இனிமேல் வரலாம். பலர் இந்நாளிலேயே இருதய கலக்கத்திலிருக்கலாம. பிள்ளையைச் சாகக்கொடுத்தவர் ஒருவர் பின் வருமாறு கூறுகிறார். என் பிள்ளை இறந்து போயிற்று. அது நான் அருமையாய் வளர்த்த குழந்தை. நான் அதற்காக எவ்வளவோ பணம் செலவழித்தேன். அதன் பிற்கால வாழ்க்கையை இனிதாக்க எவ்வளவோ காரியங்களைச் செய்தேன். என் முயற்சி, என் ஆவல், என் ஜெபம் எல்லாம் வீணாயின. அப்பிள்ளை என்னை மோசம் போக்கிவிட்டுப் போய்விட்டது. துன்பமாகிய கடலில் மூழ்கிக் கிடக்கிறேன். என் இருதயம் துக்கத்தால் வெடித்து விடும்போலிருக்கிறது. என் இருதயம் கலங்காதிருப்பது எப்படி?

இயேசு கிறிஸ்துவோடு வாழ்ந்த சீஷருள் ஒருவர் அவருக்குப் பின் வருமாறு பதிலுரைக்கிறார். நான் என் வீட்டையும், பெற்றோரையும், மனைவி பிள்ளைகளையும் விட்டுவிட்டு இயேசுவாகிய மேசியாவை நம்பி வந்தேன். அவரே எனக்கு எல்லாம் என நம்பி இருந்தேன். அவரைப் பின்பற்றியதால் உலகமே என்னை வெறுத்துத் தள்ளிவிட்டது. அதையாவது பொறுமையோடு சகித்து, வரப்போகும் மேன்மையைப் பெற்று மகிழலாம் என நினைத்தேன். அவர் தேவனுடைய குமாரன், பரலோகத்தில் சிங்காசனத்தில் வீற்றிருப்பவர். அங்கே பன்னிரண்டு சிங்காசனங்கள் வைக்கப்பட்டிருக்கும். அவற்றில் ஒன்றில் என்னை நியாயம் விசாரிக்க உட்காரச் செய்வார் என்று நினைத்திருந்தேன். ஆனால், இப்பொழுதோ, அவர் தம்மைப் பாவிகள் பிடித்துக்கொண்டு போவார்களென்றும், ஈனமான மரணம் அடைவாரென்றும கூறுகின்றார். அது மாத்திரமா; 'உங்கள் இருதயம் கலங்கவேண்டாம்' என்றுஞ்சொல்லுகிறார். உலகமே இருளா

கும்; எல்லாம் அசைக்கப்படும். ஆயினும் உங்கள் இருதயம் கலங்க வேண்டாம் என்கிறார்."

வேறொருவர் பின் வருமாறு கலக்கமுற்றுக் கூறுகிறார். என் குடும்பத்தில் எத்தனையோ துன்பம், ஆபத்து, நஷ்டம் ஏற்பட்டன. நான் அவற்றை யெல்லாம் பொறுமையோடு சகித்தேன். என் இருதயம் கலங்கவில்லை. ஆனால் இப்பொழுதோ என் சுயமரியாதைக்கே கேடு வந்துவிட்டது. நான் எல்லாவற்றிற்கும் மேலாக என் சுயமரியாதையை மதித்து வந்தேன். என் அயலான் அநியாயமாய் என் மீது பழிசுமத்தி, எனக்கு அவமானத்தை உண்டாக்குகிறானே. என் இருதயம் கலங்காதிருப்பதெப்படி ?

அவருக்கு மறுமொழியாக வேறொரு சீஷன் பின்வருவதைக் கூறுகின்றார். நான் மீன் பிடிக்கும் தொழிலைச் செய்துவந்தவன் உண்மையாய்ப் பாடுபட்டு, நியாயமான விலைக்கு மீனை விற்று வயிறு வளர்த்து வந்தேன். என்னைத் தீதாய் ஒருவரும கூறினதில்லை. என் சுய மரியாதையைக் காத்துவந்தேன். ஒருவர் கையை எதிர் பார்த்ததில்லை. உள்ளதைக் கொண்டு வாழ்க்கையை நடத்தி வந்தேன். பிறகு இயேசுவின் பின்னே சென்றேன். குருவின் சீஷன் என எல்லாரும் மதிப்பார்கள் என்று நினைத்தேன். ஆனால், இப்பொழுதோ அவர் பரலோகம் போய்விட்டார். அவரைப்பற்றிய செய்தியை அறிவிக்கும் என்னை எளனமாய் பேசுகிறார்கள். சிலுவையில் மாண்டவருடைய சீஷன் என்கிறார்கள், கல்லால் அடிக்கிறார்கள். தேவ தூஷணம் பேசுகிறேன் என்கிறார்கள். பாடுபட்டுச் சம்பாதியாது பிறர் கையை எதிர்பார்க்கிறேன்என்கிறார்கள். இவ்வளவு அவமானமும் அடைந்தபோதிலும், என் ஆண்டவர் என்னைப் பார்த்து, 'உன் இருதயம் கலங்க வேண்டாம்' என்கிறார்.

வேறொருவர் பின்வருமாறு புலம்புகிறார். பணக்கஷ்டம், மானக் கேடு இவற்றை யெல்லாம் கர்த்தருடைய கிருபையால் பொறுத்துக் கொள்வேன். ஆனால், உடல் நலம் இல்லாமல் எவ்வளவு காலம் இருப்பது? எனக்கிருக்கும் நோய் என்னை ஒடுக்குகிறதே. ஆண்டவருக்கு மகிமையாய் உழைத்துப் பலருக்கு அன்பின் தொண்டு புரியலாம் என எண்ணியிருந்த என்னை இவ்வாறு கொடிய நோயால் நீண்ட காலம் வருத்துகிறாரே. என் இருதயம் கலங்காதிருப்ப தெப்படி ?

இதற்குப் பதில் வேறொரு சீஷன் கூறுகிறார். நான் தேவன் மீது வைராக்கியமுள்ளவனாயிருந்தேன். அவருக்கென்று உழைத்து வந்தேன். என் போக்குத் தவறெனக் கண்ட என் ஆண்டவர் என்னை மறித்து மடங்கடித்துத் தம் தொண்டனாக்கினார். அதன் பின் அவருக்குத் தொண்டாற்றி வருகிறேன். என் உடலில் ஒரு

நோய் இருந்து என்னைத் துன்புறுத்தி வந்தது. அவரிடம் கூறினேன், நீக்கி விடுவார் என நம்பினேன். பிணி நீங்கினால் இன்னும் அதிகமாய் உழைக்கலாம் என நினைத்தேன். அவரோ அதை நீக்காது, 'என் கிருபை உனக்குப் போதும், உன் இருதயம் இதற்காகக் கலங்கவேண்டாம்' என்று கூறுகிறார்.

வேறொருவர்: எல்லாவற்றையும் பொறுப்பேன். உலகக் காரியங்களோ, உடலைப்பற்றிய காரியங்களோ, எனக்குப் பெரிதல்ல. என் ஆத்தும காரியமே எனக்குப் பெரிது. ஆனால், அதில் தேவ ஒளியின்றி வருந்துகிறேன். எல்லாம் இருளாயிருக்கிறது. பல சந்தேகங்கள் என்னைக் கலக்குகின்றன. விசுவாசம் பலங்குன்றிக் கொண்டே வருகிறது என் இருதயம் கலங்காதிருப்ப தெப்படி? என்று கேட்கிறார்.

இதற்குப் பதில் வேறொரு சீஷன் கூறுகிறார். எங்களைச் சூழ்ந்த இருளைப்போல் பெரிய இருள் வேறொன்று மில்லை. கிறிஸ்து சிலுவையில் மரண்டபொழுது, தேவன் எங்களைப் பார்த்து, "நான் உங்களை அறியேன். என்னை விட்டு அகன்று போங்கள், நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்" என்று சொல்லுவது போலிருந்தது. எங்கள் ஆண்டவர் இதையெல்லாம் முன்னறிந்து, 'உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக' என்று கூறிப்போனார். அவ்வார்த்தைகளால் ஆறுதலடைந்தோம். —(உயிர் மீட்சி)

---

11. ஆதியாகமம் 3 : 9 "அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு நீ எங்கே இருக்கிறாய்" என்றார்.

தேவனாகிய கர்த்தர் முதல் மனிதனைப் பார்த்துக் கேட்ட முதல் கேள்வி 'நீ எங்கே இருக்கிறாய்.' இது வேதாகமத்தில் காணப்படுகிற முதல் கேள்வி. நம்மையும் பார்த்து இதே கேள்வி கேட்கப்படுகிறதென்று யோசிக்கலாம்.

இக்கேள்வியிலிருந்து நாம் அறியக்கூடியவை.

1. கர்த்தர் நம்மை நினைவுகூறுகிறார் :—

தேவன் மனிதனை உண்டுபண்ணி அதோடு விட்டுவிட்டது அல்ல ; அவனை நினைக்கிறார். ஒரு கடிகாரக்காரன், தான் செய்து விற்பனை செய்த ஒவ்வொரு கடிகாரத்தையும் எப்போதும் நினைக்கிறதில்லை, அப்படியே கடவுளும் இருக்கிறார் என்றும், விதியை ஒருபோதும் மாற்ற இயலாது என்று கூறுபவரும் உண்டு. ஆனால் ஒரு கிறிஸ்தவன் அப்படி நினைக்க வேத ஆதாரம் இல்லை. ஒவ்வொரு நாளும் தேவன் நம்மை அன்புடன் நடத்துவதை உற்றுக் கவனிக்கும்

போது தேவன் நம்மை எப்போதும் நினைவுகூறுகிறார் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

" இதோ இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குகிறதுமில்லை, தூங்குகிறதுமில்லை "

ஆதாமை உண்டுபண்ணி அத்துடன் விட்டுவிட்டது அல்ல அவனை நினைவுகூறுகிறார் ; அவனுடைய காரியங்களை அறிந்த அவர் ' நீ எங்கே இருக்கிறாய் ' என்று கேட்கிறார். நம்மைப் பராமரிக்கும் தேவன் நம்மையும் அவ்விதமாகவே கேட்கிறார்.

2. கர்த்தர் நம்மோடு பேசுகிறார் :—

கர்த்தர் மனிதனோடு பலவிதமாகப் பேசுகிறார். இயற்கையின் மூலமாகவும், வேதாகமத்தின் மூலமாகவும், மனச்சாட்சியின் மூலமாகவும், சம்பவங்களின் மூலமாகவும் பேசுவது மாத்திரமல்ல மனிதனோடு நேரடியாகவும் பேசுகிறார்.

கர்த்தர் மனிதர்களுடன் தமது சித்தத்தை ஒவ்வொரு காரியத்திலும் தெரியப்படுத்த அவர் விரும்புகிறார். சின்னசாமுவேலோடு பேசின ஆண்டவர், பெரியவர்களோடு மாத்திரமல்ல சிறுவர்களுடனும் பேச விரும்புகிறார். நம் உத்தியோக விஷயங்களிலும், குடும்ப விஷயங்களிலும் ஆண்டவர் என்ன சொல்லுகிறார் என்று நாம் கேட்கப் பிரயாசப்படுவோமாக. அப்போது அது ஒரு பெரிய மாறுதலைப் பிறப்பிக்கும்.

' நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்.'

நீ எங்கே இருக்கிறாய், என்ன செய்தாய் என்று ஆதாமோடு தேவன் தன் சம்பாஷணையை ஆரம்பிக்கிறார்.

3. நாம் ஏன் இருக்கவேண்டிய ஸ்தானத்தில் இல்லை என்று சமாதானம் சொல்ல கர்த்தர் நம்மைக் கேட்கிறார் :—

நாம் செய்யத்தகாத காரியங்களைச் செய்யும்போது கர்த்தர் நம்மைப் பார்த்து, ஏன் ஒழுங்குள்ள நிலைமையில் இருக்கவேண்டியதற்குப் பதிலாக இப்படி இருக்கிறாய் என்று கேட்கிறார். நேர்மையற்றவர்களாக, கர்த்தருடைய கட்டளையை மீறி நடக்கும்போது, பேசத்தகாத வார்த்தைகளைப் பேசி, செய்யத்தகாத காரியங்களை செய்யும்போது ஆண்டவருக்குக் கணக்குக் கொடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம் என்று உணர்வோமாக.

' ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் சிக்கிக்கொள்ளுவது எவ்வளவு பயங்கரமான காரியம் '.

விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைத் தின்று, ஆண்டவரின் கட்டளையை ஆதாம் மீறினபோது அவன் சரியான முகாந்திரம் சொல்லக் கேட்கப்படுகிறான்.

நம்மை நினைவுகூறும் ஆண்டவரை நாம் எப்போதும் நினைத்து அவரின் வார்த்தையைக் கேட்டு அவர் நம்மைக் கடிந்துகொள்ளாத படி நடந்துகொள்ளுவோமாக.

(S. K. ஸ்டீபன்சன் ஐயர், சிவகங்கை)

சிறுவர் பகுதி

I. "எதைக் கேட்டாலும் தருவேன்" பரி. யோவான் 14 : 14.

பல்வாண்டுகளுக்கு முன், ஒரு நாள் சாயங்காலம், ஒரு பெரிய உத்தியோகஸ்தன் ஒரு ஆற்றின் கரையில் நின்றுகொண்டிருந்தார். அவர் அந்த ஆற்றின் அடுத்த கரைக்கு அதிக அவசியமாய்ப் போக வேண்டியதிருந்தது. அங்கிருந்த ஒரு தோணிக்காரன் அவரைத் தன் வள்ளத்தில் ஏற்றி அக்கரையில் கொண்டு போய்ச் சேர்த்தான். அப்போது அந்த துரை தோணிக்காரனிடம் "உனக்கு வேண்டியதை என்னிடத்தில் கேள் : நீ கேட்கிறதை நான் உனக்குத் தரக் கூடும் என்று நினைக்கிறேன்" என்றார். இவர் அக்காலத்தில் இங்கிலாந்து தேசத்தை ஆண்ட கிராம்வெல் என்னும் அதிபதி. ஆனால் இவர் யாரென்று அந்தத் தோணிக்காரனுக்குத் தெரியாது. அவர் கொடுத்த வாக்கிலிருந்து இவர் ஒரு பெரிய அதிகாரியாக இருக்க வேண்டும் என்று அறிந்துகொள்ளலாம். ஏனெனில், "உனக்குத் தேவையானதை என்னிடத்தில் கேள்" என்று எல்லாரும் சொல்ல முடியாதல்லவா? ஆனால் தோணிக்காரன் அதை உணராமல் சற்று நேரம் சும்மா நின்றான். அப்பொழுது கிராம்வெல் துரை அவனைப் பார்த்து "சீக்கிரம் கேள், பொழுது போகிறது, நான் போகவேண்டும்" என்று சொன்னார். அப்பொழுது அந்தத் தோணிக்காரன், ஆற்றோரத்திலிருந்த தன்னுடைய நிர்ப்பந்தமான குடிசையையும் அதைச் சுற்றிலுமிருந்த சிறு தோட்டத்தையும் எட்டிப்பார்த்து, பெருமூச்சு விட்டு "அதோ இருக்கிற அந்த நிலமும் வீடும் கூடுமானால் எனக்குச் சொந்தமாகும்படி செய்யும்" என்று கேட்டான். அப்பொழுது கிராம்வெல் அவனைப் பார்த்து "என்ன அற்பமான காரியத்தைக் கேட்டாய்! இந்தக் கொஞ்ச நிலத்தைக் கேட்டதற்குப் பதிலாக இந்தத் தாலுகா முழுவதையும் கேட்டிருந்தால் நன்றாய் இருக்கும். நீ கேட்டபடியே உன் வீட்டையும் நிலத்தையும் சொந்தமாய் எடுத்துக்கொள். நான் இத்தேசத்தின் அதிபதி என்று சொல்லி விட்டுப் போனார்.

பிள்ளைகளே! "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்டாலும் தருவேன்" என்று நமதாண்டவராகிய இயேசுக்கிறிஸ்து நமக்கு வாக்குச் செய்திருக்கிறார். நமக்கு அவசியமான எதையும் கொடுக்க அவரால் முடியும். நாம் அவருடைய அன்பையும் வல்லமையையும் நம்பி நமக்கு வேண்டியதை அவரிடம் கேட்போமாக.

C. S. தவமணி ஐயர்
மண்டபம் கேம்ப்.

II கிறிஸ்தவக் குடும்பம்

(எலிசபேத்து அம்மாள், மதுரை).

என் வீட்டில் உத்தம இருயத்தோடு நடந்து கொள்ளுவேன் (சங்கீதம் 101 : 2) உபாகமம் 6 : 4—9 ஐ வாசிக்கவும்.

வீட்டில் உண்டாகும் தெய்வபக்தி எல்லாவற்றிலும் மேலானது. அதற்கு அவசியமானவைகளை நன்றாய் அறிவோம். அவையாவன :— வேதம் வாசித்தல், குடும்ப ஜெபமும் பாட்டும், சாப்பாட்டு நேரத்தில் ஜெபம், ஆராதனையில் குடும்பத்திலுள்ள யாவரும் ஒன்றாய்ச் சேருதல் முதலியவை. இவைகளை உபயோகிப்பதால் நிறைவான பலனை அடைகிறோம். ஒரு கிறிஸ்தவ வீடு கிறிஸ்தவ வேலை ஸ்தலம்.

வேதாகமக் காலத்தில் தேவபக்தி வீட்டில் உண்டானது. வேதக் கட்டளை "நீ வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோது அவைகளைப் பற்றிப் பேசு" என்பதே. அப்படிப்பட்ட வீட்டை இயேசுவானவர் உயர்த்துகிறார். வீட்டிலே வீட்டிலுள்ள கிறிஸ்தவ சற்குணங்களை கற்றுக்கொள்கிறார்கள். அவையாவன :—நன்றியறிதல், மற்றவர்களைப் பற்றிய சிந்தை, ஒன்றுசேரல், உத்தரவாதம், பகிர்ந்துகொள்ளல், உக்கிராணம், மதிப்பு, அன்பு முதலியவை.

குடும்பத்தில் தேவ பக்தியைப் பணிபடுத்துகிற வீட்டைக் கடவுள் திரவியமுடையதாய் ஆசீர்வதிப்பார்.

இந்த நாளின் தியானம் :—

"நானும் என் வீட்டாருமோ வென்றால் கர்த்தரையே சேவிப்போம்"

III. ஆலயம்.

இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை
(மத். 16 : 18) மத் 16 : 13—28 ஐ வாசிக்க.

1 ஆலயம் தேவனுடைய வீடு.

நாம் பயபக்தியோடு வாசல்வழியாய் அதில் பிரவேசிக்கிறோம். அது தேவனுடைய வாசஸ்தலமாயிருக்கிறபடியால் அவருடைய மகிமை ஆலயத்தை நிரப்புகிறது என்று உணரும்போது, நம் இருதயங்கள் பயபக்தியாய் அமர்ந்திருக்கிறது.

2 ஆலயம் ஜெபவீடு

இங்கே எல்லா மனிதரும் அவர்களுடைய விசுவாசத்தில் உயிர்ப்பிக்கப்படவும் தாங்கள் செய்யவேண்டிய பிரயாணத்துக்கு இருதயங்கள் இளைப்பாறுதல் அடையவும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் ஜெப பீடத்தில் செய்யவேண்டிய ஜெபங்களில் வணக்கம் தோத்திரம் செலுத்துதல், விண்ணப்பம், பரிந்து பேசுதல், மன்றாட்டு, மனந்திரும்புதல், பிரதிஷ்டைபண்ணுதல் யாவும் எப்போதும் அங்கிகரிக்கப்பட்டவை.

3 ஆலயம் தொழிற்சாலை.

அங்கே தேவனோடு சேர்ந்து ஊழியம் செய்கிற பக்தியுள்ள ஆத்துமாக்களை விஸ்தாரமான பூமி முழுவதிலும், சகோதரத்வம், நீதி, சமாதானம், கிறிஸ்துவைப் போல் ஜீவித்தல், இவற்றை நிலைநிறுத்த ஒன்று சேர்ந்து உழைக்கிறார்கள்.

ரட்சண்ய யாத்திரிக விளக்கம்

4. பரம ராஜ்யப் படலம்.

ரட்சண்ய யாத்திரிக காவியத்தை இயற்றியவர் அருட் கவிஞர் ஆல்பிரட் கிருஷ்ணபிள்ளை. இப்பிரபஞ்ச வாழ்க்கையிலே ஆன்மாவிற்கு நேரிடும் சோதனைகளையும், அவற்றை மேற்கொண்டு வெற்றியுற்று வாழ்க்கை நடத்தி முத்தியடைவதைப்பற்றியும் ஆசிரியர் சித்தரிக்கின்றார்.

மோட்சபிரயாணி பிரபஞ்சமாகிய வனத்திலே நெடுநாள் சஞ்சரித்து, பாவசுமையால் நொந்து வருந்துகின்றான். மெய்யுணர்ச்சி தூண்ட தத்துவ ஆராச்சியிலீடுபடுகிறான். பாவத்திற்கு வருந்தி மனஸ்தாபப்படுகின்றான். அப்போது வேதியர் குருவாகிய சுவிசேஷகன் வந்து, பரம ராஜ்யத்தைப்பற்றி விவரமாய்க் கூறுகின்றார். இதுவே பரம ராஜ்யப் படலம்.

இப்படலத்திலே பல நயமான வர்ணனைகள் உள்ளன. பரம ராஜ்யத்தில் ஓடும் திருநதி, வயல்கள், உழவர்களின் தொழில், பரம ராஜ்யத்தின் தலைநகர்ச்சிறப்பு, இறைவனின் அரண்மனை, தூதர்சேனை

முதலியவைகளைப்பற்றிய அழகிய வர்ணனைகளை காணலாம்.—உவமையாக, உருவகமாகக் கூறப்பட்ட வர்ணனைகள்.

முதலாவது கடவுளுடைய கருணையை ஜீவகங்கையாக உவமித்துச் செல்கின்றார் கவிஞர். இந்த ஜீவகங்கை எங்கு உற்பத்தியாகின்றது? எக்கடலினின்றும் எமமேகம் மழை பொழிந்து ஆறாக ஓடுகின்றது?

அருளாகிய மேகங்கிளம்பி, அன்பாகிய கடலில், அமிர்தமாகிய நீரை மொண்டு, ரட்சண்ய மாமேருமலையில் மழையாகப் பெய்ய ஜீவகங்கை உற்பத்தியாகின்றது. தூய்மையான கற்பக மலரை ஏந்தி வருகின்றது. இரு கரை மருங்கிலும் ஞானமாகிய ரத்தினங்களை வாரி வாரி வரிசையாக ஒதுக்குகின்றது.

"ஞான மணியணிக் குவியலை ஒதுக்கும்"

பிதா குமாரன் பரிசுத்தாவி என்னும் திரித்துவமாகிய முப்பிரிவாகிய சிகரத்திலிருந்து உற்பத்தியாகின்றது இக்கருணை வெள்ளம். "முத்தலைச் சிகரிநின்றும் முளைத்தது இச்சீவகங்கை"—என்றார் கவிஞர். இதயமென்னும் கழனிகளில் பாய்ந்து வளப்படுத்துகின்றது.

ஓடிவரும் வழியில் பாவமரங்களை முறித்துத் தள்ளுகின்றது. இருண்ட காட்டு நிலங்களை மருத நிலங்களாக மாற்றுகின்றது. ஜென்ம பாவம், கன்ம பாவம் என்னும் இரண்டு வகையான பாவத் தூறுகள் பருத்து வளர்ந்த இருண்ட பெரிய காட்டை முற்றிலும் வேரற வெட்டித் தள்ளி, தூய நீர்க்கால்களைச் செலுத்தி ஈடு இணையற்ற மருத நிலங்களாக மாற்றுவது ஜீவகங்கை.

மேலும் இக்கருணை நதியானது இறைவனுடைய ஆணையைப் போன்றது. எவ்வாறு—அந்த அருள் நதியானது அநேக பிரிவுகளாகிச் சென்று குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய ஐவகை நிலங்களில் பாய்ந்து, அவற்றின் வேறுபாட்டை மாற்றி, எல்லா நிலங்களையும் மருத நிலமாக மாற்றுகின்றது.

நிலங்களின் மேடுபள்ளத்தையும், ஏற்றத்தாழ்வையும் சமப்படுத்துவது. கடவுள் கருணை எல்லோர் மேலும சமமாய் பாய்ந்து வழிந்தோடுவது. ஆகவே கடவுள் வேந்தனுடைய ஆணைக்கு ஒப்பானது.

இனிக் கடவுட் கருணை நதிபாயும் இதயமெனும் மருத நிலத்திலே எவ்வாறு உழவர்கள் உழுது பயிர் செய்கின்றனர்? என்ன விளைவிக்கின்றனர்? எனப்பார்ப்போம்.

மெய்யான பக்தர்களே உழவர்கள். விசுவாசமே அவர்களின் ஏர்; ஆசை, ஊக்கம் என்பன இரண்டு எருதுகள். கடமையே அவற்றைச் சேர்க்கும் நுகத்தடி. ஏகசிந்தனையே அவற்றைக் கட்டும் வடம். பெருமானுடைய திருமொழியே கூர்மையான கொழு. இவற்றைக்கொண்டு நன்குழுது செய்காலாக்கி மெய்யான பணியைச் செய்கின்றனர்.

பாட்டு

ஏர் விசுவாசமாக; எருது அவா ஊக்க மாகச்
சேர் நுகம் கடப்பா டாக; செறிவடம் சிந்தை யாக;
கூர் நுதிக் கொழு வெமபெம்மான் திருமொழிக் கூற தாக
பாரற வுழுது செய்கால் ஆக்கி மெய்ப் பணிசெய் வாரும்.

(வித்வான். வி. ப. கா. சுந்தரம்
பசுமலை)

கி. மு. சங்கப் பொருள்கள்—டிசம்பர் 1953.

டிசம்பர்

1.	முன் ஏறிச் செல்லுதல்	பிலிப் 3 : 4-14
2.	பரிசுத்தத்தில் வளர்ச்சி	ரோமர் 12 : 1-9
3.	பரிபூரண மனிதனின் குணசீலம்	கொலோ 3 : 8-15
4.	உயர் தன்மையுள்ள மனுஷத்துவம்	சங் 37 : 28-37
5.	ஒரு பெரிய அவா	II கொரி 13 : 5-13
6.	கிறிஸ்துவில் பரிபூரணம்	எபேசியர் 4 : 7-16
7.	வாழ்க்கை ஓர் இரகசியம்	சங் 119 : 1-17
8.	நிச்சய மற்றிருத்தல்	யோபு 24 : 2-25
9.	ஜீவன் எங்கே இருக்கிறது?	சங் 36 : 5-12
10.	விசாலமுள்ள ஜீவியம்	எபே 3 : 14-21
11.	மாறுதலுள்ள ஜீவியம்	யோபு 7 : 6-10
12.	நித்திய ஜீவியம்	மாற்கு 10 : 17-22
13.	கிறிஸ்துவிலுள்ள ஜீவன்	கொலோ 3 : 1-11 I யோவான் 5 : 11-13
14.	தேவன் நம்மோடிருக்கிறார்	மத் 1 : 18-25
15.	மரியாளின் வாழ்த்து	லூக்கா 1 : 46-57
16.	நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்	ஏசாயா 9 : 1-7

17.	சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி	லூக் 2 : 1-18
18.	நமக்காக தரித்திரர் ஆனார்	II கொரி 8 : 9 பிலி 2 : 1-11
19.	மாம்சத்தில் வெளிப்பட்டார்	I தீமோ 3 : 16 யோவான் 1 : 1-18
20.	கிறிஸ்து ஜயந்தியில் பிறரை சந்தோஷப்படுத்து	லூக்கா 6 : 27-45
21.	பிறப்பு	லூக் 2 : 1-7
22.	முன்னோடி	லூக் 1 : 5-25
23.	முன் தூதன்	லூக் 1 : 29-56
24.	கன்னிமரியாளின் கீதம்	லூக் 1 : 26-38
25.	மேய்ப்பர்கள்	லூக் 2 : 8-20
26.	சிமியோனின் கீதம்	லூக் 2 : 21-33
27.	சாஸ்திரிகள்	மத் 2 : 1-14
28.	நல்ல ஆயத்தம்	II தீமோ 2 : 1-7
29.	நல்ல இலக்கு	பிலிப் 3 : 7-11
30.	நல்ல இலட்சியம்	II தீமோ 2 : 1-15
31.	நல்ல மனப்பான்மை	சங் 5 : 1-12

இயேசுவின் ஜெபப்பள்ளி

முதலாம் பாடம்

ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்கப் போதித்தருளும்' அவர் ஓரிடத்தில் ஜெபம பண்ணி முடித்தபின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி 'ஆண்டவரே, எங்களுக்கு ஜெபம் பண்ணப் போதித்தருளும்' என்றான்.—(லூக்கா 11 : 1)

சீஷர்கள் கிறிஸ்துவோடு இருந்தனர். அவர் ஜெபித்ததைக் கண்ணாரக் கண்டனர். அவரது வெளியரங்கமான வாழ்க்கைக்கும் அவரது அந்தரங்கமான ஜெப ஜீவியத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை விளங்கிக்கொண்டனர். அவரைப்போல் எவரும ஜெபிக்க முடியாதாகையால் அவரே ஜெபக்கலையில் நிபுணர் என்று நம்பினர். ஆகையினால்தான் அவர்கள் அவரிடம் 'ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்கப் போதித்தருளும' என்று விண்ணப்பித்தனர். அவர்கள் பிற்காலத்தில் அவரிடமிருந்து கற்ற ஜெப போதனை

யைப் பார்க்கிலும் சிறந்ததெதுவும் இல்லை என்ற முடிவுக்கும் வந்திருப்பார்.

அன்று நடந்தது போலவே இன்றும் நடக்கிறது. அவர் ஓரிடத்தில் ஜெபித்துக்கொண்டிருப்பதைப் பார்க்கும் இந்நாள் சீடர்கள் அந்த முன்னாள் சீடர்களைப் போலவே பரவசமடைந்து அவரை அணுகி 'ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்கப் போதித்தருளும்' என்று வேண்டுகின்றனர். நாம் கிறிஸ்தவ வாழ்க்கையில் முதிர்ச்சி அடையும்போது அவரது என்றும் தவறாத பரிந்து பேசுதல் மேன்மேலும் விலையேறப்பெற்றதாய் இருப்பதை அறிவோம். பரிந்து பேசுதலில் கிறிஸ்துவைப் போல இருக்கும் நம்பிக்கையில் இன்னும் அதிகக் கவர்ச்சியை ஊட்டுகிறது. அவர் ஜெபிக்க நாம் பார்க்கும் போது, அவர்போல் எவரும ஜெபிக்க முடியாது என்பதை நினைவு கூரும்போதும், அவர்போல் எவரும் போதிக்க முடியாது என்பதை உணரும்போதும், 'ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்கப் போதித்தருளும்' என்ற முன்னாள் சீடரின் விண்ணப்பமே இந்நாள் நமக்குத் தேவை என்று உணருகிறோம். அவர் எதுவாக இருக்கிறார், நமக்கு என்ன வைத்திருக்கிறார். அவர் எப்படி நாமாகவே இருக்கிறார் அவர் எப்படி நம் வாழ்வாக இருக்கிறார் என்று சிந்திக்கும் பொழுது, நாம் அவரிடம் வெறுமனே கேட்பதைத் தவிர வேறொன்றும் செய்ய வேண்டியதில்லை என்று உறுதி கொள்ளுகிறோம். அவர் உள்ளங் கனிந்து உவகை பூத்து நமமைத் தமமுடன் நெருங்கிய ஐக்கியத்திற்குள் ஏற்றுக்கொண்டு, அவர் ஜெபிப்பதுபோலவே நாமும் ஜெபிக்க நமக்குக் கற்றுக்கொடுப்பார் என்ற நிச்சயத்திற்கு வருகிறோம்.

வாருங்கள் சகோதரரே! தெய்வீக ஜெபக்கலையிலும், பரிந்து பேசுதலிலும் பயிற்சி பெறவிரும்பும் அனைவருக்கும் தட்டுத் தடங்கலில்லாது என்றும் திறந்து வைத்திருக்கும் அவரது ஜெபப் பள்ளியில் நம்மையும மாணவர்களாகச் சேர்த்துக்கொள்ளும்படி அவரிடம விண்ணப்பம் செய்வோம். ஆம், இன்றே, இப்பொழுதே முன்னாள் சீடர் வேண்டினது போலவே 'ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்கப் போதித்தருளும்' என்று அவரிடம் மன்றாடுவோம். நாம் தியானிக்கும்போது நமது விண்ணப்பத்தின் ஒவ்வொரு வார்த்தையும் அர்த்த புஷ்டி உள்ளதாய் இருப்பதைக் காண்கிறோம்.

'ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்கப் போதித்தருளும்' என்பதிலுள்ளபடி, நாம் எப்படி ஜெபிக்கவேண்டும் என்று போதிக்கப்படுவதே நமது இன்றைய தேவை. ஆரம்பத்தில் ஒரு சிறு குழந்தை கூட எளிதில் கற்றுக்கொள்ளக்கூடியதாக ஜெபம் இருந்த போதிலும், அதே சமயத்தில் அது மகா உன்னதமானதும் மகா பரிசுத்தமானதுமாய் இருப்பதால் மனிதன் அதன் சிகரத்தை அடைவது

கஷ்டத்தோடுதான் முடியும் என்பதையும் அறிதல் வேண்டும். அது சாட்சிப் பொருள் அல்லாத கருத்துப் பொருளாகிய மகா உன்னத மானவரோடு கொள்ளும் ஐக்கியமாகும். அழியாத நித்திய உல கின் வல்லமைகள் ஜெபத்தினிடம் இருக்கின்றன. ஜெபமே சகல ஆசிகளின் வாய்க்கால். ஜெபமே வல்லமையின் இரகசியம். ஜெபமே புனிதம் மிக்க மனித வாழ்க்கை. நமக்காக மட்டுமல்லாது, பிறர் நலத் திற்காகவும், திருச்சபை நலத்திற்காகவும், சருவ உலக நலத்திற்காக வும் கடவுளையும் கடவுள் பலத்தையும் நமதாக்கிக்கொள்ளும் சக்தியை ஜெபத்திற்குக் கடவுள் அளித்துள்ளார். ஜெபத்தின்மீதுதான் வாக்குத் தத்தங்களின் நிறைவேறுதல் காததிருக்கிறது. கடவுள் இராஜ்ய வருகையும் அதைப் பொறுத்தே இருக்கிறது. அவரது மகிமையின் முழு வெளிப்படுத்துதலும் அதனையே பொறுத்திருக்கிறது. இப்புனி தத் திருப்பணிக்கு நாம் எவ்வளவு சோம்பேறிகளாகவும் தகுதியற்ற வர்களாகவும இருக்கின்றோம்! கடவுளின் ஆவி ஒன்றே நாம் அப் பணியைச் சரியாகச் செய்ய நம்மை உயிர்ப்பித்து நமக்குச் சக்தியை அளிக்கும். நமக்கு வல்லமை தேவையாயிருக்கும்போது ஜெபிக்கும் முறையைச் சரியாகத் தெரிந்துகொள்ளுவதில்லை! நமது பால்யகாலப் பயிற்சியும், திருச்சபை போதனையும, பழக்கத்தின் செல்வாக்கும், மன எழுச்சிகளின் உற்சாகமும் எவ்வளவு எளிதாய் நம்மை ஜெபிக் கத் தூண்டுகின்றன! ஆனல் அப்படிப்பட்ட ஜெபத்திற்கு ஆவியின் வன்மை இல்லை. அதனுல் யாதொரு நன்மையும் இல்லை. கடவுளின் பலத்தைப் பற்றிப்பிடிக்கும் மெய்யான ஜெபமே நன்மை பயக்கும். அதற்கே வானகத்தின் வாசல்கள் விசாலமாய்த் திறக்கும். அப் படிப்பட்ட அரும்பெரும் ஜெபத்தைச் சொல்லிக் கொடுப்பார் எவரேனும் உண்டா என்று யார்தான் தேடமாட்டார்! ஜெபத்தில் வல்லமை பெற ஆசிக்கும் அவரது பக்தரை, ஜெபத்தில் பயிற்றுவிப் பதற்காக இயேசு ஒரு ஜெபப் பள்ளியைத் திறந்து வைத்திருக்கின் றார். 'ஆண்டவரே,' எங்களுக்கு ஜெபிக்கப் போதித்தருளும்' என்ற விண்ணப்பத்தோடு அவரது ஜெபப்பள்ளியில் சேருவோ மாக.

ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்கப் போதித்தருளும்'. ஆம், எங்களுக்குத்தான் ஆண்டவரே. பண்டைய விசுவாசிகள் எத்தகைய வல்லமையோடு ஜெபித்து வந்தனர் என்றும், அவர்களது ஜெபங் களுக்கு எத்தகைய பலத்த அதிசயங்கள் செய்யப்பட்டன வென்றும், உமது திவ்விய அருள் மொழியில் வாசித்திருக்கின்றோம். பழைய உடன்படிக்கையின் காலமான ஆயத்த காலத்திலேயே இவ்வளவு நடந்திருந்தால் நிறைவேறுதலின் காலமாகிய இந்நாட் களில் உமது பிரசன்னத்தை உமது அடியாருக்கு எவ்வளவு அதிக மாய்த் தந்தருளுவீர் என்பது சிந்திக்குந்தோறும் சிந்தைக்கினியது கேட்குந்தோறும் செவிக்கினியது, பயிலுந்தோறும் ஆன்மாவுக்கினி

யது. உமது நாமத்திலே ஜெபத்தின் வல்லமையாகிய வாக்குத்தத்தங்களை உமது அப்போஸ்தலருக்கு அருளினதை நாங்கள் கேள்விப்பட்டிருக்கின்றோம். அவ்வாக்குத்தத்தங்களின் உண்மையை அவர்கள் எவ்வளவு மாண்புடன் தம் அனுபவத்தில் கண்கூடாகக் கண்டறிந்தனர் என்பதையும் நாங்கள் கண்டிருக்கிறோம். எனவே அன்று அருளிய அவ்வாக்குத்தத்தங்கள் இன்றும் எங்களுக்கு மெய்யாகவே நிறைவேறும் என்று நிச்சயமாய் அறிந்திருக்கின்றோம். இந்நாட்களிலும் கூட உம்மை நம்புகிற அடியாருக்கு நீர் அன்றுபோல் இன்றும் தருகிற உமது வல்லமையின் மாண்பு மிக்க அடையாளங்களைச் செவியாரக் கேட்கின்றோம். ஆண்டவரே! அவ்வடியார்களும் எம்போன்ற இயல்புகள் உடையவரே. ஆகையால் எங்களுக்கும் ஜெபிக்கப் போதித்தருளும். அவ்வாக்குத்தத்தங்கள் எங்களுக்கே. உலகின் வரப்பிரசாதங்களும் வல்லமைகளும் எங்களுக்கே. நாங்கள் ஏராளமாக அவற்றைப் பெறும்படி எங்களுக்கு ஜெபிக்கப் போதித்தருளும். எங்களிடத்திலும் உம்முடைய தெய்வத் திருபணியை ஒப்படைத்திருக்கின்றீர். உமது இராஜியத்தின் வருகை எங்கள் ஜெபத்தைப் பொறுத்தும் இருக்கிறது. எங்கள் ஜெபத்தினாலும் உமது நாமத்தை மகிமைப்படுத்த முடியும். ஆதலால் 'ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்கப் போதித்தருளும்' எங்களை உம்மிடம் கற்றுக்கொள்பவராக ஒப்படைக்கிறோம். போதித்தருளும்.

நாங்கள் எப்படி ஜெபிக்க வேண்டும் என்றும் கற்றுக்கொள்வது அவசியமென்றும் உணருகிறோம். முதலில் ஜெபிப்பது எளிதாயிருப்பினும் பின்னால் கடினமாயிருக்கிறது. நாங்கள் சரியாக ஜெபிக்க அறிகிலோம். (ரோ. 8 : 26) நிச்சயமும் தெளிவுமான வாக்குத்தத்தங்கள் அடங்கிய கடவுள் திருமொழி எமக்கு உண்டு என்பது மெய்யே. ஆனால் அவ்வருள் மொழியை நாங்கள் பிரயோகப்படுத்த முடியாதபடி எங்கள் பாவத்தால் எங்களுடைய மனம் இருண்டு போனது. ஆத்மீகவிஷயங்களில் மிகத்தேவையான விஷயங்களை நாங்கள் எப்பொழுதும் நாடுவதில்லை. அல்லது மகா பரிசுத்த ஸ்தலத்தின் பிரமாணத்தின்படி நாங்கள் ஜெபிப்பதுமில்லை. எங்களுக்குத் தேவையானவற்றைக் கேட்கும்படிப் பரமதந்தை தந்துள்ள அபூர்வ உரிமையை அநித்திய காரியங்களில் கூடப் பயன்படுத்திக்கொள்ளவும் திறமையற்றிருக்கின்றோம். நாங்கள் என்ன கேட்கவேண்டுமென்று அறிந்தாலும், அவை ஒப்புக்கொள்ளக்கூடியனவா என்று அறியாதிருக்கின்றோம். ஜெபமானது கடவுளுடைய மகிமைக்கு உரியதாகவும், அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொள்ளக்கூடியதாகவும் முழு விசுவாச நிச்சயத்தை உடைத்தாகவும், இயேசுவின் நாமத்தில் கேட்கப்படுவதாகவும், விடாமுயற்சி உடையதாகவும் அமையவேண்டும். இவை

அனைத்தையும் கற்கவேண்டும். இடைவிடாது நடக்கும் ஜெபப்பள்ளியில்தான் அவற்றைக் கற்கமுடியும். ஏனெனில் பயிற்சியே பரிபூரணமளிக்கும். நமது அறியாமையை உணரும்போதும், நமது தகுதியின்மையை அறியும்போதும் நம்பிக்கைக்கும் சந்தேகத்திற்கும் ஊடே உழன்று தவிக்கும்போதுமட்டுமே தெய்வீகக் கலையாகிய, வல்லமைமிக்க ஜெபம் கற்கப்படுகிறது. ஏனெனில் நாம் அதனை நினைவில் வைக்காவிடினும் விசுவாசத்தையும் ஜெபத்தையும் துவக்குகிறவரும் முடிக்கிறவருமான ஒருவர் இருக்கின்றார். அவர் நமது ஜெபத்தைக் கவனிக்கின்றார். அவரை நம்பி ஜெபிக்கும் பக்தர்கள் அவரது ஜெபப்பள்ளியில் பரிபூரணம் அடையும்படி அவர் உதவி செய்கிறார். நமது ஜெபம் அனைத்திலும் அறியாமை நிறைந்திருப்பதால், நாம் கற்பிக்கப்படவேண்டும என்ற தாழ்ந்த தொனி ஜெபத்தில் இருத்தல் வேண்டும். அவரே பூரணகுரு என்ற விசுவாசமும் இருக்கவேண்டும். நமக்கு அவர் போதிப்பார் என்ற நிச்சயமும் உடையவராக இருத்தல்வேண்டும் இப்படிச் செய்வோமானால் வல்லமையோடு ஜெபிக்கக் கற்றுக்கொள்வோம் என்பது நிச்சயம்.

அவரைப்போல் எவரும் போதிக்க முடியாதிருப்பதால் அவரை அணுகி 'ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்கப் போதித்தருளும்' என்று வேண்டுகிறோம். மாணவனுக்கு ஒரு நல்லாசிரியன் தேவை. அந்த நல்லாசிரியன் போதனைவரமும், பொறுமையும் அன்பும் பொருந்தியவராய் மாணவனின் நிலைக்கு இறங்கி வரக்கூடியவராய் மாணவனின் தேவையை உணர்ந்தவராய் இருத்தல் வேண்டும். இப்பண்பாடுகளும் இன்னும் பிற அம்சங்களும் பொருந்திய குரு இயேசுவே அல்லாது வேறொருவருமிலர். அவரே ஜெபம் இன்னதென்பதை அறிவார். ஜெபிக்கிற இயேசுவே ஜெபிக்கக் கற்பிக்கிறார். அவரது பூலோக வாழ்வில் சோதனைகள், கண்ணீர் முதலியவற்றின் மத்தியிலேதான் அவர் ஜெபத்தைக் கற்றுக்கொண்டார். வானகத்தில் இன்றைக்கும் அவருடைய வேலை அதுதான். அங்கு அவருடைய வாழ்க்கை ஜெபமே.

தம்மோடு சேர்க்கக்கூடியவரைக் கூட்டிப் பரமதந்தையின் திருச்சமூகத்தில் வைப்பதும், அவர்களைச்சுற்றி உள்ளவருக்காகக் கடவுள் ஆசி இறங்கும்படி ஜெபிக்கத்தக்க வல்லமையென்னும் ஆடையை அவர்களுக்கு உடுத்துவதும் பூலோகத்தில் கடவுள் இராஜியம் வெளிப்படுத்தப்படுவதற்குரிய பரிந்து பேசுதலில், அவர்களைத் தமது ஊழியர்களாய் இருக்கும்படி பயிற்றுவிப்பதுமே அவருக்கு ஒப்பற்ற மகிழ்ச்சியைத் தரக்கூடியது. எப்படிக் கற்பிப்பதென்று அவர் அறிவார். ஒரு சமயம் தேவையின் அவசரத்தாலும் மறு சமயம் மகிழ்ச்சியூட்டும் நம்பிக்கையாலும அவர் கற்பிக்கிறார். இங்கு வேதபோதனையினாலும் அங்கு ஒரு ஜெபம் எப்படி இருந்தால் அங்கீகரிக்கப்படும் என்பதை அறிந்துள்ள மற்றொரு விசுவாசியின்

அறிக்கையினாலும் அவர் போதிக்கிறார். அவரது பரிசுத்த ஆவியின் மூலம் நமது இதய பீடத்தில் அமருகிறார். ஜெபத்தைக் கேட்க விடாது தடுக்கும் பாபத்திரையைச் சுட்டிக்காட்டி ஜெபிக்கப் போதிக்கிறார் என்ன கேட்கவேண்டு மென்பதற்குப் பொருள் தருகிறார். எப்படிக் கேட்கவேண்டுமென்று போதிக்கிறார். அத்துடன் ஜெபத்தின் ஆவியை நமக்குள் ஊதுவதினாலே, நமக்குள்ளே மகா பரிந்துபேசுகிறவராக வாழ்வதாலே அவர் போதிக்கிறார். நாம் கிஞ்சித்தும ஐயமின்றி உள்ளக்களிப்புடன் அவரைப்போல் எவரும் போதியார் என்று சொல்லலாம். இயேசு தமது சீடருக்கு எப்படிப் பிரசங்கிக்க வேண்டுமென்று கற்பிக்கவில்லை, ஆனால் எப்படி ஜெபிக்க வேண்டுமென்றே கற்பித்தார். மனிதனோடு பேசுவது எப்படி என்று அறிவதைப்பார்க்கிலும் கடவுளோடு பேசுவது எப்படி என்று அறிவதுமேல். மனிதரோடு இருக்கும் நமது வல்லமையைப் பார்க்கிலும் கடவுளோடு இருக்கும நமது வல்லமையே தலைமையானது. எப்படி ஜெபிப்பதென்று நமக்குப் போதிக்க இயேசு பிரியம் கொள்கிறார். அப்பயிற்சியைத் தரும்படி அவரிடம் வேண்டுவதே நமது கடன். பூலோகத்தில் அவர் திருவாய் மலர்ந்தருளிய அருள் மொழிகளைத் தியானிக்கும்போது அத்தகைய ஆசிரியரின்கீழ் நாம் தேர்ச்சி அடைவோம் என்ற முழு நம்பிக்கையோடு அவருடைய போதனைக்கு நம்மை ஒப்புக்கொடுப்போமாக. தியானிப்பதற்கு மட்டுமல்ல, ஜெபிக்கவும், அவருடைய சிங்காதனத்தின் கீழ் வீற்றிருக்கவும், பரிந்து பேசும் திருப்பணியில் பயிற்சிபெறவும், நெடுங்காலம் செலவிடுவோமாக. நமது மழலைச்சொற்கள், பயங்கள் ஆகியவற்றின் மத்தியிலும் அவரது திருப்பணியை அழகாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார் என்ற முழு உறுதியோடு அவ்வாறு செய்வோம். ஜெபததின் சகல அம்சங்களும அடங்கிய அவரது சொந்த ஆவி(life)யை நம்மீது ஊதுவார். அவரது நீதியிலும் நமமை அவர் பங்காளிகளாக்குகிறபடியால் அவரது பரிந்துபேசுதலிலும நம்மைப் பங்காளிகளாக்குவார். நாம் அவரது திருமேனியின் உறுப்பினர்கள் என்ற முறையிலும் பரிசுத்த ஆசாரியத்துவம் உடையவர்கள் நாம் என்ற முறையிலும் மனிதருக்காக அவர் கடவுளோடு பரிந்து பேசும் ஆசாரியத் திருப்பணியில் பங்குபெறுவோமாக. நாம் அறிவீனரும் பலவீனருமாயிருந்தபோதிலும் 'ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்கப் போதித்தருளும்' என்று மகிழ்வுடன் வேண்டுவோமாக.

ஆசி மிக்க ஆண்டவரே! நீர் எனக்கு ஜெபிக்கவும் ஜெபிப்பதற்காகவே வாழவும் போதித்தருளும். இப்படிச்செய்வதால் வானகத்தில் உமது மகிமையில் பங்கு பெறவும் நான் இடைவிடாது ஜெபிக்கவும் கடவுள் சமூகத்தில் ஒரு ஆசாரியன் போல நிற்கவும் நீர் விரும்புகிறீர்.

ஆண்டவராகிய இயேசுவே! எப்படி ஜெபிக்க வேண்டுமோ அப்படி ஜெபிக்கத் தெரியவில்லை என்று அறிக்கையிடும் கூட்டத்தாருள் ஒருவனாக என் பெயரையும் பதிவு செய்து எனக்கு ஜெபப் பயிற்சி அருளும். உம்மோடு உமது பள்ளியில் இருக்கவும் என்னைப் பயிற்றுவிக்கும்படி உமக்குச் சமயம் கொடுக்கவும் எனக்குப் போதித்தருளும். ஆவியின் வறுமையிலும் ஜெபிக்கத்தெரியாத அறியாமையாலும் உழன்று கொண்டிருக்கும் என்னை உமது பாதாரவிந்தத்தில் முழங்காலில் நின்று படிக்க உதவியருளும். உம் போன்ற ஆசிரியரால் நான் நன்கு ஜெபிக்கக் கற்க முடியும் என்ற நம்பிக்கையை எனக்குள் நிரப்பும். ஜெப உலகின் இரகசியத்தை எனக்கு வெளிப்படுத்தியருளும். ஆமென்.

Committee for Special Literature on the Indian Church and Social Concerns

இந்திய சபை, சமுதாய முன்னேற்றத்திற்கான விசேஷ இலக்கியக் குழு

கிறிஸ்தவ எழுத்தாளர்களைக் கிராம சபைகளின் நலனுக்காக சமுதாய விஷயங்களைப்பற்றிக் கட்டுரைகள் எழுத உற்சாகப்படுத்த இவ் விசேஷ இலக்கிய குழு உருவாயிற்று. மிகவும் நன்றாய் எழுதுவோருக்கு இவ்விலக்கியக் குழு 50 ரூபாய் பரிசு வழங்கும்.

இதன் விதிகள் பின்வருமாறு:

1. கட்டுரைகள் கீழே கூறப்பட்டிருக்கும் விஷயங்களில் ஏதேனும் ஒன்றைப்பற்றி எழுதியிருக்கவேண்டும்.

(1) கிறிஸ்தவனும் ஜாதியும்.

(2) நமது சபைகளின் சமுதாய கடமை.

(3) நிலங்களைப்பற்றிய கிறிஸ்தவ மனப்பான்மை.

(4) வேலையின்மையைப்பற்றி கிறிஸ்தவனின் மனப்பான்மை.

(5) அரசியலில் கிறிஸ்தவனின் பங்கு.

2. கட்டுரைகள் கீழ்காணும் ஏதேனும் ஒரு பாஷையில் எழுதப்படலாம்: ஆங்கிலம், தமிழ் மலையாளம் மற்றும் பாஷைகள்.

3. கட்டுரைகள் அந்தந்த பாஷை வட்டாரங்களின் கிராம அறிவுக்குத்தக்கதாயும், ஆங்கிலத்தில் எழுதும் கட்டுரைகள் உயர்தரப் பாடசாலை அறிவுக்குத்தக்கதாயும் எழுதப்படவேண்டும்.

4. அவைகள் 2000 முதல் 3000 வார்த்தைகள் உள்ளனவாக இருத்தல் வேண்டும்.

5. ஒவ்வொரு பாஷையிலும் ஒவ்வொரு விஷயத்திற்கு 50 ரூபாய் பரிசு வழங்கப்படும்

6. ஒவ்வொரு பாஷைக்கும் பரிசளிக்க ஏற்படுத்தப் பட்டிருக்கும் போர்டாரின் தீர்மானமே அங்கீகரிக்கப்படும்.

7. வியாசங்கள் எதிர்பார்க்கும் அளவு உயர்நிலையை அடையாவிடில் தீர்ப்பாளர் அவைகளுக்குப் பரிசு வழங்காமல் நிராகரிக்க உரிமை உண்டு.

8. பரிசுபெறும் கட்டுரைகள் இந்த விசேஷ குழுவிற்கே பிரசுரிமை பெற்றது. அது அவைகளை பிரசுரிக்கத்தக்க ஏற்பாடு பண்ணும். விசேஷ வேண்டுகோள் இன்றியும், போதிய தபால் பில்லைகள் இன்றியும் வரும் கட்டுரைகள் திரும்ப அனுப்பப்படமாட்டா.

9 இதில் பங்குகொள்ளும் எழுத்தாளர், அது தங்களது சொந்தக்கட்டுரைதான் என்றும், இதற்குமுன் பிரசுரஞ் செய்யப் படாததென்றும் உறுதி கூறவேண்டும்.

10. கட்டுரைகள் டைப் அடிக்கப்பட்டனவாகவோ, கையால் தெளிவாய் எழுதப்பட்டனவாகவோ இருத்தல் வேண்டும். அவைகளை "The Secretary, Special Literature Committee, United Theological College, 17, Miller's Road, Bangalore 1" என்ற விலாசத்திற்கு 31-12-1953க்குப் பிந்தாமல் அனுப்பவும்.

ரெவ. ஜே. ஆர். சந்திரன்,
காரியதரிசி,
விசேஷ இலக்கியக் குழு.

(தேசோபகாரி
—நவம்பர்).

அறிவிப்பு

அத்தியட்சர் ஸ்டீவர்ட்ஸ்மித் அவர்கள் ராஜிநாமா செய்துவிட்டபடியால் கனம் ஆர். லிப் ஐயரவர்கள் நவம்பர் 9ம் உ முதல் கமிஷரியாக மாடரேற்றரவர்களால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கூடியசீக்கிரம் அத்தியட்சர் பதவிக்கு தேர்தல் நடக்கும். கேரளம் அத்தியட்சாதீனத்தையும் அதின் கமிஷரியையும் அங்கு சமீபத்தில் நடக்கவிருக்கும் தேர்தலில் உண்மையும உத்தமமுமான அத்தியட்சர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பதையும் சபையார் தங்கள் அன்றாடக ஜெபங்களில் மன்றாடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

லெஸ்லி நியூபிகின்
அத்தியட்சர்

Lenox-Press, Pasumalai 11--11--'53. 474 c.